1981 எப்ரல் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடைமுறையிலே வருகிற சிக்கல். ''லா அண்ட் ஆர்டர்' என்று மற்ற இனங்களிலே வருமே தவிர நிதி சம்பந்தமான பிரச்சினையில், பணச் செலவு பற்றி இநதச் சட்டத்திலே் குறிப்பிட்டது, அதுபோல் வராது என்று நான் கருதுகிறேன். ஆகவே விவாதத்தை இதில் துவங்கலாம்.

திருவாளர்கள் என். சங்கரய்யா, ரா. உமாநாத், கு. ரமணி, என். வரதராஜன், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் இந்த சட்டமுன்வடிவை சட்டமன்றத்தின் கூட்டு பொறுக்கு குழுவின் ஆய்வுக்கு அனுப்பவேண்டுமென்ற பொதுத்திருத்தத்தைத் தந்திருக்கிறார்கள். அதைப்போலவே திருவாளர்கள். சோ. அழகர்சாமி, இரா. கருப்பையா, பொ. உத்திராபதி, என். ஏ. பூங்காவனம். மு. அம்பிகாபதி ஆகியோர்களும் ஒரு பொதுத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

''தமிழ்நாடு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு சட்ட முன்வடிவு, 1981 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 21/1981)

(i) மக்களின் கருத்தறிய சுற்றுக்கு விடப்பெற வேண்டும்.

(ii) சட்ட மன்றத்தின் கூட்டுப் பொறுக்குக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப் பெறவேண்டும்'',

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே. நான் அதை வழிமொழிகிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (6—4—1981 பகல் சுமார் 10–25 மணிக்கு) பார்வையாளர் மாடத்திலிருந்து சில கோஷங்களை எழுப்பிய

[பேரவைத் தலைவர்] [1981 ஏப்ரல் 6

(1) திரு. கே. பஞ்சாட்சரம் (எஸ். கன்னையன் மகன்)

(2) திரு. ஆறுமுகம் (சீனிவாசன் மகன்).

ஆகிய இருவரும் தற்போது பேரவைக் காவலரின் (சார்ஜன்ட்) காவலில் இருக்கிறார்கள். அவர்களது செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும். இதைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இவருக்கு அனுமதிச் சீட்டு வழங்கியது மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பாலன் அவர்களின் பரிந்துரையின் மேல். மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டுவருவார்கள்.

7. அரசினர் தீர்மானம்.

பார்வையாளர் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியவர்கள் மீது நடவடிக்கை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

''இன்று (6—4—1981) பகல் சுமார் 10-25 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள—

(1) சென்னை, வியாசர்பாடி, கென்னடி நகர் 474-ம் எண் வீட்டிலிருக்கும் எஸ். கன்னையனின் மகன் கே. பஞ்சாட்சரம் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்.

(2) சென்னை, வியாசர்பாடி, கென்னடி நகர் 420-ம் எண் வீட்டிலிருக்கும் திரு. சீனிவாசனின் மகன் ஆறுமுகம் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்.

பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS